சார்பு நீதிமன்றம், மேலூர்

MCOP 5/2024

| | |
|---|---|
| பெயர் | : சையது |
| தகப்பனார் பெயர் | :முத்துமுகமது |
| கணவர் பெயர் | : |
| வயது | :48 |
| கிராமம் | :மேலூர் |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :காய்கறி விற்பனையாளர் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

14.08.2025

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த மனுவில் மனுதாரர். என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது ம.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது

குறுக்கு விசாரணை :(2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணையை 1ம் மனுதாரர் ஏற்று கொள்கிறார். )

நான் விபத்து தொடர்பாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. விபத்தானது கூத்தப்பன்பட்டி சர்வீஸ் சாலையில் நடந்தது. விபத்தானது எங்கு நடந்தது என்றால் கூத்தப்பன்பட்டியில் இருந்து சர்வீஸ் சாலை வழியாக திருச்சி - மதுரை தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது. இறந்த நபர் பெயர் பீர்முகமது. நான் சிவகங்கை சாலையில் கோட்டநத்தாம்பட்டியில் இருந்து நயினார்ஊரணிக்கு இருசக்கரவாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். நான் சென்ற போது எனக்கு முன்னால் அதே திசையில்

இறந்த பீர்முகமது, இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். பீர்முகமது சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் தெரியாது. ஆனால் அது ஸ்பிலண்டர் வாகனமாகும். எதிரே வந்த யமஹா இருசக்கரவாகன ஓட்டுநர் அதிகவேகமாக வந்து நேருக்குநேராக வந்து பீர்முகமது ஓட்டிவந்த வாகனத்தின் மீது மோதிவிட்டது. நான் காவல்நிலையத்திற்கு தகவல் கொடுக்கவில்லை. விபத்து நடந்தவுடன் கூட்டம் கூடிவிட்டது. யமஹா ஓட்டுநருக்கும் காயம் ஏற்பட்டது. என்னை காவலர்கள் விசாரணை செய்தார்கள். மேற்படி சாலையில் தடுப்புசுவர் வழியாக பாதை இருந்ததா என்றால் இல்லை. வழக்கறிஞர் அழைத்ததன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். இறந்த பீர்முகமது, எனக்கு உறவினர் அல்ல, பழக்கப்பட்ட நபர் தான். விபத்து நடந்து சுமார் அரைமணிநேரம் அங்கு தான் இருந்தேன். மதியம் 3.00 மணியளவில் விபத்து நடந்தது. மேற்படி குற்ற வழக்கு எண்.281/2023 நிலுவையில் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல விபத்து நடக்கவில்லை என்றும், இறந்த பீர்முகமது, விபத்துக்கான காரணம் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவு அல்ல என்றும் இறந்த பீர்முகமதுவின் காரணமாக தான் விபத்து நடந்துள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வேறு விதமாக விபத்து நடந்துள்ளது என்றும் ஆனால் தவறாக 1ம் எதிர்மனுதாரரை விபத்தில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.14 18:39:33 +0530

Sub Judge

Melur